(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1(11).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2019 மார்ச்சு 15 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2019 ஏப்ரல் 01, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

409/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில்,

(i) இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து ஈட்டிக்கொள்ளப்பட்டு நாட்டிலிருந்து வெளியில் கொண்டுசெல்லப்பட்டுள்ள இலாபத்தின் அளவானது ஐக்கிய அமெரிக்க டொலர்களில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அவ்வாறு பணம் வெளியில் கொண்டு செல்லப்பட்டதன் காணரமாக ரூபாயின் பெறுமதி மீது ஏற்பட்டுள்ள தாக்கம் எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு முதலீட்டின் மூலமும் இலங்கைக்கு தொழில் ரீதியாக கிடைக்கப்பெற்ற அனுகூலம் மற்றும் வேறு அனுகூலங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

470/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆண்டிலிருந்து 2018 வரையிலான காலகட்டத்தில் இலங்கையின் பசும்பால் உற்பத்தி ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையிலும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலகட்டத்தில் பால் உற்பத்திற்காக பங்களிப்பு வழங்கிய பிரதான மாவட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) இலங்கையின் தற்போதைய பாற்பண்ணையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2000 ஆண்டிலிருந்து 2018 வரையிலான காலகட்டத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள,

(i) பால்மாவின் அளவு மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் அதன் பெறுமதி யாதென்பதையும்;

(ii) பால்மாவிற்காக அரசாங்கம் அறவிட்டுள்ள வரிகள், அவற்றின் திருத்தங்கள் மற்றும் அவை மூலமாக அரசாங்கம் ஈட்டியுள்ள வருமானம் யாதென்பதையும்;

ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையிலும் தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

478/ ’19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கொழும்பு 10, டாலி வீதி, இலக்கம் 320 என்ற விலாசத்தில் அமைந்துள்ள மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 14,500 சதுர அடி கொண்ட கட்டடம் குத்தகை அடிப்படையில் எந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கட்டடம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காலம் மற்றும் குத்தகைத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) 05 வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பீட்டை இற்றைப்படுத்தி புதிய மதிப்பீட்டு விலைக்கு மேற்படி கட்டடம் குத்தகைக்கு வழங்கப்படுகிறதா என்பதையும்;

(iv) உடன்படிக்கைக்கு அமைய குத்தகையாளரிடமிருந்த மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சேர வேண்டி பணம் அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

481/ '19

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— தொலைத்தொடர்பாடல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டு முதல் 2015 வரையிலான காலப்பகுதியில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு அனுசரணை வழங்கியுள்ள சகல நிறுவனங்களும் யாவை என்பதையும்;

(ii) இதற்காக கிடைக்கப்பெற்றுள்ள பணத்தொகை யாது என்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டு முதல் 2018 வரையிலான காலப்பகுதியில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு அனுசரணை வழங்கியுள்ள சகல நிறுவனங்களும் யாவை என்பதையும்;

(iv) இதற்காக கிடைக்கப்பெற்றுள்ள பணத்தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 முதல் 2016 வரையிலான காலப்பகுதியில் இலங்கை தேயிலைச் சபை மற்றும் டயலொக் நிறுவனத்தினால் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள நிதி அனுசரணை யாது என்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டு முதல் 2018 வரையிலான காலப்பகுதியில் டயலொக் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள அனுசரணையின் நிதிப் பெறுமானம் மற்றும் குறிப்பிட்ட காலப்பகுதியில் இலங்கை தேயிலைச் சபையின் உரிமைகள் விற்கப்பட்டிருப்பது யாருக்கு என்பதையும்;

(iii) இதற்காக பின்பற்றப்பட்டுள்ள நடைமுறை யாது என்பதையும்;

(iv) இதிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள வருமானம் யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

518/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.01.01 ஆம் திகதி தொடக்கம் 2015.01.01 ஆம் திகதி வரை இலங்கைப் பிரசைகளால் அரச வங்கிகளிலிருந்து பெறப்பட்டுள்ள மொத்த அடகுக்கடன்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தங்கநகைகளை அடகுவைத்து பெறப்பட்டுள்ள கடனின் அளவு யாது;

(iii) தங்கநகைகளை அடகுவைத்து ரூபா இரண்டு இலட்சத்தைவிடக் குறைவாக கடன் பெற்றுள்ள பெண்கள் மற்றும் ஆண்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iv) மேலே (i) இல் குறிப்பிட்ட கடனின் அளவு அக்காலப்பகுதிக்குள் விநியோகித்துள்ள ஒட்டுமொத்த கடனின் சதவீதமாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

622/ '18

கௌரவ செஹான் சேமசிங்க,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள, இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அனுராதபுரம் டிப்போவுக்குச் சொந்தமான பேருந்துகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இவற்றில் ஓட்டத்தில் விடக்கூடிய நிலையிலுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2018.09.21ஆம் திகதி அனுராதபுரம் டிப்போவில் பேருந்துகள் ஓட்டத்தில் விடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அன்றைய தினம் ஓட்டத்தில் விடப்பட்ட பேருந்துகளின் ஓட்ட அட்டவணைகளைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அன்றைய தினம் கிடைத்த வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) அன்றைய தினம் பேருந்துகள் வேறு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனவா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும் ஈடுபடுத்தப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) அந்த நடவடிக்கைகளுக்கென சம்பந்தப்பட்ட அமைச்சினால் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருப்பின், செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

627/ '19

கௌரவ ரி.ரஞ்சித் த சொய்சா,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது சைப்பிரஸில் பணியாற்றும் இலங்கையர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இதற்கேற்ப, இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கொன்சல் அலுவலகம் அல்லது தூதுவராலயம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதா;

(iii) ஆமெனில், இந்த அலுவலகத்தை தாபித்ததன் பின்னர், இதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்க வேண்டி ஏற்படும் மொத்த நிதித்தொகை யாது;

(iv) இதன் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு விசேட நன்மைகள் கிடைக்கப்பெறுகின்றனவா;

(v) ஆமெனில், குறிப்பிட்ட நன்மைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

681/ '18

கௌரவ கனக ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஶ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்கு சொந்தமான விமானங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விமானமும் பயன்படுத்தப்பட்டுள்ள காலம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) குத்தகை ஒப்பந்தம் நிறைவடைந்த பின்னர் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு மீண்டும் பெற்றுக்கொடுக்கப்பட்ட விமானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள காலம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வாறு மீண்டும் பெற்றுக்கொடுக்கப்பட்ட விமானங்களை விட பழைய விமானங்கள் ஶ்ரீலங்கன் விமான நிறுவனத்தில் குத்தகை அடிப்படையில் இன்னும் பயன்படுத்தப்பட்டுவருகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனின், இவ்வாறு பழைய விமானங்களை இற்றைவரையில் வைத்திருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இதற்குரிய பிரமாணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2019 ஏப்ரல் 02, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5/ ’18

கௌரவ ஹேஷா விதானகே,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 -2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் ஆரம்பிக்கப்பட்ட கிராம எழுச்சி வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அந்த வீடமைப்புக் கருத்திட்டங்களின் வீடு பெறுனர்களை தெரிவு செய்வதற்கு பின்பற்றப்பட்ட முறையியல் யாது;

(iii) குறிப்பிட்ட கருத்திட்டங்கள் ஊடாக பயனாளிகளாக நிவாரணம் கிடைத்தோரின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஊடாக நாட்டில் வீடற்ற மக்களுக்காக போதியளவு ஒத்துழைப்பினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

117/ ’18

கௌரவ சமிந்த விஜேசிறி,— புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தம்பதிவ யாத்திரைகளை ஏற்பாடு செய்ய அனுமதி பெற்றுள்ள நிறுவனங்கள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் ஆட்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் இன்று வரை தம்பதிவ யாத்திரைகளின் போது மரணித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு மரணித்துள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி ஆட்களை தம்பதிவவுக்கு அழைத்துச்சென்ற நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(vi) இவ்வாறு மரணித்தவர்களின் குடும்பங்களது நலன்புரிக்காக அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

410/ ’18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சரவை நியமித்த நிலையியற் பெறுகைக் குழு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்தை புறத்தொதுக்கி முதலாவது சந்தர்ப்பத்தில் நிராகரிக்கப்பட்ட கொள்கலன்களில் பொருத்தப்பட்ட 50 மின் பிறப்பாக்கிகளை நிறுவுவதற்கான இரண்டு விலைகூறுனர்களை மீண்டும் மீள்மதிப்பீடு செய்யுமாறு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை வேண்டிக்கொண்டதா என்பதையும்;

(ii) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அதன் 2017.07.12 ஆம் தேதிய அறிக்கையில் Senok Trade Combine Pvt. Ltd மிகப் பொருத்தமான மற்றும் பதில் நடவடிக்கைக்குரிய ஆகக் குறைந்த விலைகூறுனர் என்று இரண்டாம் தடவையாகவும் விதந்துரைத்ததா என்பதையும்;

(iii) அமைச்சரவை அங்கீகாரத்தினூடாக அமைச்சரவை நியமித்த நிலையியற் பெறுகைக் குழு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை புறத்தொதுக்கி கேள்விப் பத்திரத்தை 2017.07.31 ஆம் திகதி இந்தியாவின் Sterling & Wilson என்ற நிறுவனத்துக்கு வழங்கியதா என்பதையும்;

(iv) சனாதிபதி செயலகத்திலுள்ள பெறுகை மேன்முறையீட்டுச் சபைக்கு Senok Trade Combine Pvt. Ltd மேன்முறையீடொன்றை செய்ததா என்பதையும்;

(v) Senok கம்பனியானது ஏற்கனவே நிறுவுவதற்கான பூச்சிய ஆகுசெலவை அதன் கேள்விப்பத்திரத்தில் உள்ளடக்கியுள்ள அதேவேளை, நிறுவுவதற்கான ஆகுசெலவைக் கருத்தில்கொண்டு Sterling & Wilson மற்றும் கொரியா நிறுவனம் ஆகியவற்றின் விலைக்கேள்வியை மீள்பரிசீலனை செய்யுமாறு அமைச்சும் பெறுகை மேன்முறையீட்டுச் சபையும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை வேண்டிக்கொண்டதற்கான காரணத்தையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

479/ ’ 19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான ஹந்தானை தோட்டத்தின் தேயிலைக் கொழுந்து உற்பத்தி ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உற்பத்திகளின் விற்பனையின் மூலம் வருடாந்தம் கிடைத்த தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) 2018.06.30 ஆம் திகதியளவில் தேயிலைக் கொழுந்து விற்பனையின் மூலம் கிடைக்க வேண்டிய முழுத் தொகையும் மக்கள் தோட்ட அபவிருத்திச் சபைக்கு கிடைத்துள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், நிலுவைத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

675/ ' 19

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுற்றுலாக் கைத்தெழில் தொடர்பாக வருடத்திற்கு 2.5 மில்லியன் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை அழைக்கின்ற தேசிய இலக்கொன்று இருக்கின்றதென்பதையும்;

(ii) இலங்கைக்கு வருகின்ற கூடுதலான சுற்றுலா பயணிகள் கடற்கரை வலயங்களை பார்வையிட வருகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், அது தொடர்பாக அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) இனங்காணப்பட்டுள்ள கடற்கரை சார்ந்த சுற்றுலா வலயங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி சுற்றுலா கரையோர வலயங்களை துரிதமாக தாபிப்பது எவ்வாறென்பதையும்;

(iv) இது தெடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வாறு ஒரு சுற்றுலா வலயத்தை மேம்படுத்த செலவாகும் பணத்தொகை யாதென்பதையும்;

(ii) ஏதேனும் கடற்கரை வலயமொன்று சுற்றுலா கடற்கரை வலயமொன்றாக விதந்துரைக்கப்படும் சான்றிதழை பெற எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

755/ '19

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,— ஆரம்பக் கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 - 2018 ஆண்டு வரையில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மிளகின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் யார் என்பதையும்;

(iii) இலங்கைக்கு மிளகு இறக்குமதி செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனின், இவ்விறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கிய உத்தியோகத்தர் மற்றும் இறக்குமதியாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் வருடாந்த மிளகு உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(ii) 2010 தொடக்கம் 2018 ஆண்டுவரை உலக சந்தையில் உச்ச மிளகு விலை ஒவ்வொரு ஆண்டின் படி வெவ்வேறாக யாதென்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

757/ '18

கௌரவ ரொஷான் ரணசிங்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வட மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2019.01.31 வரையான காலத்தில் வரையறுக்கப்பட்ட GSMB — தொழில்நுட்ப சேவைகள் ( தனியார்) கம்பனியினூடாக மனம்பிட்டி மணல் அகழ்வு துறையினால் விநியோகிக்கப்பட்ட மணல் கியுப்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) GSMB கம்பனியின் ஊடாக நாளாந்தம் மணல் விநியோகிக்கும் முன்னுரிமை (டோக்கன் வழங்குதல்) எவ்வாறு வழங்கப்படுகிறது என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) GSMB கம்பனி மூலமாக மனம்பிட்டி மணல் அகழ்வு துறை சார்பில் நாளாந்தம் மற்றும் மாதாந்தம் கிடைக்கும் அரசிற்கான வருமானம் எவ்வளவென்பதையும்;

(ii) 2013 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையில் GSMB கம்பனி மூலமாக அரசாங்கத்திற்கு கிடைத்த மொத்த வருமானம் ஒவ்வொரு ஆண்டின் படி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொகை வைப்பிலிடப்பட்ட கணக்கு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

770/ '19

கௌரவ சாந்த பண்டார,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் மாகாண சபைகளில், உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்ததன் காரணமாக தற்போது கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) கலைக்கப்பட்டுள்ள (உத்தியோகபூர்வ காலம் நிறைவடைந்துள்ள) மாகாண சபைகள் கலைக்கப்பட்டது முதல் கடந்துள்ள காலப்பகுதி வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கு மேலதிகமாக, எஞ்சியுள்ள மாகாண சபைகளின் உத்தியோகபூர்வ காலம் நிறைவடைவதற்கு உள்ள காலப்பகுதி வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) கலைக்கப்பட்டுள்ள மேற்படி மாகாண சபைகளின் தேர்தலை நடாத்தி, அம் மாகாண சபைகளை தொழிற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2019 ஏப்ரல் 03, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

663/ ' 18

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 43,818 குடும்பங்கள் வசிக்கின்றன என்பதனையும்;

(ii) மீள்குடியேற்றப்பட்டதன் பின்னர் இதுவரையில் 4,039 குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை என்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு வழங்குவதற்கு துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதனையும்;

(ii) ஆமெனில், எந்த திகதியன்று இது வழங்கப்படும் என்பதனையும்;

(iii) அவ்வாறில்லையாயின், என்ன காரணங்களுக்காக என்பதனையும்

இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

247/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்தின் மகியங்கனை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

452/ '19

கௌரவ சந்திம கமகே,— காணி, பாராளுமன்ற மறுசீரமைப்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதவிய நகரிலிருந்து கஹட்டகொல்லேவ வரையான (பிரதான வீதியின் இடது புற பிரதேசம்) பிரதேசம் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இப் பிரதேசத்தில் பதவிய மாவட்ட மருத்துவமனை, கிராமங்கள், விஹாரைகள் மற்றும் சனசமூக நிலையம் ஆகியவை அமைந்துள்ளதென்பதையும்;

(ii) 1957 ஆம் ஆண்டு தொடக்கம் இப் பிரதேசத்தில் மக்கள் குடியிருக்கின்றனர் என்பதையும்;

(iii) அதன் குடியிருப்பாளர்கள் சிலரிடம் சட்ட ரீதியான காணி உரிமப்பத்திரங்கள் காணப்படுகின்றதென்பதையும்;

(iv) ஏனைய குடியிருப்பாளர்களுக்கு காணி உரிமப்பத்திரங்களை பெறுகையில் வனசீவராசிகள் வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளமை அதற்கு இடையூறாக உள்ளதென்பதையும்;

(v) இக் காரணத்தினால் பதவிய நகரில் பல வருடங்களாக குடியிருக்கின்ற ஆட்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) காணி உரிமப்பத்திரமின்றி மேற்படி காணிகளில் குடியிருக்கின்ற ஆட்களுக்கு உரிமப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

482/ '19

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— தொலைத்தொடர்பாடல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டு சுதந்திர விருதுக்கான கிரிக்கெட் போட்டித்தொடரின் போது, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு வெளியே, அப்போட்டியின் ஒளிபரப்பு உரிமை / அனுசரணைக் கொடுப்பனவு ஆகியன மூன்றாவது தரப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், அவர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள தரகுப் பணம் யாது;

(iii) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு உரித்தாக வேண்டியிருந்த சகல பணத்தையும் மூன்றாவது தரப்புக்கு வழங்குவதற்கான அங்கீகாரத்தை வழங்கியது யார்;

(iv) குறிப்பிட்ட தவறான முடிவை முன்னெடுத்தவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

540/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை விமானப் படையின் எயார் வைஸ் மார்ஷல் திரு.கே.ரீ.பீ.பீ.ஜயம்பதி அவர்கள் 2008.01.08 ஆம் திகதி சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்டு தமது வாகனத்தை சுங்கத்திலிருந்து விடுவித்துக் கொண்டுள்ளார் என்பதையும்;

(ii) குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு மீண்டும் சலுகை அடிப்படையில் வாகனமொன்றை இன்னும் 5 வருடங்களின் பின்னரே பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளபோதிலும் மேற்படி அனுமதிப்பத்திரம் பற்றிய தகவல்களைப் போலியாகக் குறிப்பிட்டு 2011.01.14 ஆம் திகதி முன்னாள் விமானப் படைத் தளபதியினதும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரினதும் விதப்புரைகளுடன் மீண்டும் சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக விண்ணபப்படிவமொன்றைச் சமர்ப்பித்து 2011.06.07 ஆம் திகதி உரிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்துள்ளார் என்பதையும்;

(iii) அதன் பிரகாரம் அவர் சுற்றறிக்கை நியதிகளை மீறியுள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) சுற்றறிக்கை நியதிகளுக்கு எதிராக சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை தருவிப்பதற்காக குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு விதப்புரை செய்தமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கும் விமானப் படைத் தளபதிக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட ரீதியான நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

593/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவு இலக்கம் 288 இல் குறிப்பிடப்பட்டுள்ள பங்குச் சந்தை தரகர்கள் முகம்கொடுத்திருந்த நெருக்கடிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அரசு தலையீடு செய்த முறை யாதென்பதையும்;

(iii) 2014 முதல் 2016 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பங்குச் சந்தையில் செயலாற்றிய தரகர்களின் எண்ணிக்கை, இவர்களின் பிரதேச ரீதியிலான பரம்பல், மற்றும் ஒவ்வொரு ஆண்டிலும் தரகர் கொடுக்கல் வாங்கல்களின் அளவு ஆகியவற்றைக் காட்டும் ஒரு தரவு அட்டவணையை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டினுள் ஒருங்கிணைந்த பங்குச் சந்தை தரகர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

623/ '18

கௌரவ செஹான் சேமசிங்க,— பிரதம அமைச்சரும் தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸிற்குச் சொந்தமான ஓட்டக் கூடிய நிலையிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களின் வகைகள் மற்றும் அவற்றுக்குரிய பொலிஸ் நிலையங்கள் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iii) தற்போது ஓட்டக் கூடிய நிலையிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இலங்கைப் பொலிஸிற்கென கொள்வனவு செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அந்த நிறுவனங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் யாவை என்பதையும்;

(iv) அதற்கென கடன் வசதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) அவ்வாறாயின், கடன் வசதி அளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

682/ '18

கௌரவ கனக ஹேரத்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தினால் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட விமானமொன்று இந்நிறுவனத்தினால் குத்தகை அடிப்படையில் வேறு நிறுவனமொன்றுக்கு மீளளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி விமானம் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட லீசிங் நிறுவனத்திற்கு ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தினால் செலுத்தப்படும் மாதாந்த குத்தகை தவணைப் பணம் எவ்வளவென்பதையும்;

(iii) மீண்டும் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிறுவனத்தினால் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்கு செலுத்தப்படும் மாதாந்த குத்தகை தவணைப் பணம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி விமானம் விமானப் பயண அனுமதிப்பத்திரம் மற்றும் சிவில் விமானங்கள் பதிவு பட்டியலுக்குள் உள்ளடக்கப்படுமா என்பதையும்;

(v) மேற்படி விமானத்திற்கு பதிவிலக்கம் இருக்குமெனின், அவ்விலக்கம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2019 ஏப்ரல் 04, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

8/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எம்பிலிப்பிட்டிய சந்திரிக்கா வாவியிலிருந்து குடிப்பதற்கும், விவசாய நடவடிக்கைகளுக்கும் தண்ணீரைப் பெற்றுக்கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) எம்பிலிப்பிட்டிய வாரச் சந்தையின் கழிவுப்பொருட்கள் சந்திரிக்கா வாவியில் சேர்வதால் பாரியளவில் சுற்றாடல் மாசு ஏற்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நிலைமையைத் தணிப்பதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

120/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மகியங்கனை பொதுக்கூட்ட மண்டபம் நிறுவப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) தற்போது அந்த பொதுக்கூட்ட மண்டபத்தில் பல குறைபாடுகள் இருப்பதனை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்தக் குறைபாடுகள் யாவை என்பதையும்;

(iv) அந்தக் குறைபாடுகளைக் குறைப்பதற்கு அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

221/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை இராணுவத்தில், இலங்கைக் கடற்படையில் மற்றும் இலங்கை விமானப் படையில் பணியாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் மற்றும் இவர்களின் இலங்கை மருத்துவ சங்கப் பதிவு இலக்கங்கள் ஒவ்வொரு படைகளுக்கும் ஏற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

326/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பாரியதொரு பிரதேசத்தை உள்ளடக்குகின்ற மதவாச்சி பொலிஸ் நிலையமானது மிகப் பழைய கட்டடமொன்றில் தாபிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கட்டடத்தை புதுப்பித்தல் அல்லது புதியதொரு கட்டடத்தை நிர்மாணித்தல் தொடர்பாக ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனை நடைமுறைப்படுத்தும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

397/ '18

கௌரவ எஸ்.சி. முத்துகுமாரண,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை வட மத்திய மாகாணத்தில் கார்பட் இடப்பட்டுள்ள கிராம வீதிகளின் நீளம் ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக கிலோமீற்றர் எவ்வளவு;

(ii) அந்த வீதிகள் பராமரிக்கப்படுவது மத்திய அரசாங்கத்தினாலா அல்லது மாகாண சபையினாலா;

(iii) கார்பட் இடப்பட்ட சில பதைகளின் ஓரங்கள் பழுதடைந்துள்ளதால் அந்த பாதைகள் மிக விரைவாக சேதமடைவதை அவர் ஏற்றுக்கொள்வாரா ;

(iv) பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு வருடாந்தம் நிதி ஒதுக்கப்படுகின்றதா;

(v) அந்த பணத்தின் மூலம் இந்த பாதைகள் பராமரிக்கபடுகின்றனவா என்பது தொடர்பாக விசாரிக்கப்படுகின்றதா;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

550/ '19

கௌரவ சி. சிறீதரன்,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டிலுள்ள இருபத்தைந்து மாவட்டங்களிலும் கிரிக்கெட் சங்கங்கள் இருபத்தைந்து உள்ளனவா என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திற்காக கிரிக்கெட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இதுவரை அனுமதி வழங்காமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(iii) கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் சங்கமானது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பதிவிற்காகப் பலமுறை விண்ணப்பித்த போதிலும், இதுவரை அதனைப் பதிவு செய்யாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iv) 2010 ஆம் ஆண்டின் பின்னர், கிளிநொச்சி மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கு உங்களது அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள உதவிகள் எவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

835/ ' 19

கௌரவ கே. காதர் மஸ்தான்,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச சபைக்குரித்தான வேப்பங்குளம் முதல் சிலாபத்துறை வரையிலான உள்ளக வீதி 2010 ஆம் ஆண்டில் மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பித்த மற்றும் முடிவுறுத்திய திகதிகள்;

(ii) வீதியின் நீளம்;

(iii) அப்பாதையின் வழியே அமைந்துள்ள கிராமங்கள்;

(iv) அதற்குரிய ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனம்;

(v) நிறுவனத்தின் அப்போதைய உரிமையாளர்கள் (பங்காளர்கள்);

(vi) அந்நோக்கத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை;

(vii) அப்பாதை தற்போது பயன்படுத்தப்படுகின்றதா;

யாவையென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

859/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எஹலியகொட கரந்தன பிரதேசத்தில் மண்சரிவினால் வீடுகள் அழிவுற்ற குடும்பங்கள் எஹலியகொட பிரிவின் ஏனைய கிராம உத்தியோகர் பிரிவுகளில் மண் சரிவில் சிக்கி வீடுகள் அழிவுற்ற குடும்பங்கள் மற்றும் கடும் ஆபத்தான வலயத்தில் வசிக்கும் குடும்பங்கள் உட்பட எந்தவொரு குடும்பத்துக்கும் 2017 டிசம்பர் தொடக்கம் வீட்டு வாடகைக் கொப்பனவு கிடைக்கவில்லை என்பதையும்;

(ii) வீட்டு வாடகை செலுத்துவதற்காக தேவையான நிதி ஒதுக்கம் எஹலியகொட பிரதேச அலுவலகத்தில் கேட்டபோது கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அந்த நிலுவை வீட்டு வாடகைகளை செலுத்துவதற்காக தேவையான நிதி எஹலியகொட பிரதேச செயலாளருக்கு வழங்கப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அத் திகதி யாது என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

# 2019 ஏப்ரல் 05, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

11/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 10 மில்லியன் LED மின்குமிழ்களை வாடிக்கையாளர்களிடையே பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டத்திற்கு செலவான பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட பணத் தொகையை மின் வாடிக்கையாளர்களிடமிருந்து மீளஅறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வது அநீதியானது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தை வழிப்படுத்திய நிறுவனம் யாது என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் தோல்வியடைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

121/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா மாகாண கமத்தொழில் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் விவசாயப் பண்ணைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த விவசாயப் பண்ணைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) அந்த ஒவ்வொரு விவசாயப் பண்ணையிலும் பணி புரியும் தொழிலாளர்களின் பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) அந்த தொழிலாளர்களில் தற்போது நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) ஏனைய தொழிலாளர்களையும் நிரந்தரமாக்க அமைச்சு நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

546/ ' 19

கௌரவ எஸ். சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவக வலயத்தில் எழுவைதீவில் அமைந்துள்ள பாடசாலைகள் எத்தனையென்பதையும்;

(ii) இத்தீவில் அமைந்துள்ள சரவணபவா வித்தியாலயத்தில் க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தயார்நிலையிலுள்ள மாணவர்கள் அப்பாடசாலையில் தவணைப் பரீட்சைக்கு தோற்றுகின்ற இறுதித் தரம் யாதென்பதையும்;

(iii) தற்பொழுது அம்மாணவர்கள் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றுகின்ற பாடசாலை யாதென்பதையும்;

(iv) க.பொ.த. (சா/த) பரீட்சையை எழுவை தீவில் நடாத்துவதற்குள்ள தடைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

541/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 150,000 சலுகை விலைக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி மோட்டார் சைக்கிள்களை வழங்குகையில் எவ்விதமான நிபந்தனைக்கும் கட்டுப்படுத்தவில்லை என்பதையும்;

(iii) ஆயினும் பெரும்பாலும் மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொண்ட பொலிசு உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் ரூபா 150,000 - ரூபா 200,000 இடைப்பட்ட பணத்தொகையைச் செலுத்துமாறு வற்புறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அப்பணத்தொகையைச் செலுத்தும்வரை ஓய்வூதியம் செலுத்துதல் ஆரம்பிக்கப்படமாட்டாதென அவர்களின் சேவை நிலையங்களிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும் ;

(v) இதற்கிணங்க இளைப்பாறிய பெருந்தொகையான பொலிசு உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக ஓய்வூதியம் கிடைக்காமையால் நிர்க்கதி நிலையிலுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தும்பொருட்டு தாமதமின்றி பொருத்தமான முறையியலொன்றை வகுப்பாரா;

(ii) ஆமெனில் அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

690/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2016 ஆம் ஆண்டில் கொஸ்கம, சாலாவ இராணுவ ஆயுத களஞ்சியம் வெடித்தமையினால்,

(i) உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அங்கவீனமுற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) உயிரிழந்த ஆளொருவருக்காக அரசாங்கத்தின் சார்பில் செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) சேதமடைந்த வீடுகளுக்காக செலுத்தப்பட்ட கூடியபட்ச மற்றும் குறைந்தபட்ச இழப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) இடம்பெயர்ந்த சகலருக்கும் நிரந்தர வீடுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) இடம்பெயர்ந்த குடும்பமொன்றிற்கு நிரந்தர வீடொன்று பெற்றுக் கொடுக்கப்பட்ட அண்மித்த திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

758/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமத்தொழில் அமைச்சு இயங்கிவரும் இராஜகிரியவில் அமைந்துள்ள 288 ஆம் இலக்க டீ.பீ.ஜே. டவர் கட்டடம் வாடகைக்கு/குத்தகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பிரதிகளைச் சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம் இதன் மாதாந்த வாடகை கூலி / குத்தகைக் காலம் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் அக்காலம் முடிவுறும் திகதி யாது;

(iii) கட்டடம் வாடகைக்கு/குத்தகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப் படாதுள்ள காலப்பகுதி யாது;

(iv) குறிப்பிட்ட காலத்துக்கான கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கட்டடத்தைப் பெற்றுக்கொள்கையில், முறையான கேள்விப் பத்திரம் கோரும் நடைமுறை பின்பற்றப்பட்டிருப்பின், அதற்காக முன்வைக்கப்பட்டுள்ள விலைகள் யாவை;

(ii) கட்டடத்தை வாடகைக்கு பெறுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருப்பின், அதன் பிரதியை முன்வைப்பாரா;

(iii) அமைச்சு முன்னர் இயங்கிய "கொவிஜன மந்திரய" மீளப்பெறுவதற்காக பாராளுமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதிலளிப்பு யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

826/ ' 19

கௌரவ ச. வியாழேந்திரன்,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் புன்னைக்குடா பிரதேசத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியை சட்டவிரோதமாக கைப்பற்றியமைக்கு எதிராக ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் வருகின்ற மேற்படி காணி தொடர்பாக ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மாவட்டச் செயலாளரினால் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவருக்கு எழுதப்பட்ட 2016.05.16 திகதிய ADMGC (MN) 3/7 எனும் இலக்கத்தை கொண்ட கடிதத்தின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணி தொடர்பில் மேற்கொண்ட சட்டவிரோதமான அத்துமீறல்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாதென்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) (i) ஆணைக்குழுவின் தலைவரினால் MADA/75, 76, 77 இலக்க, 2016.09.26 திகதி நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) பிரதமரின் அறிவுறுத்தலுக்கமைய நியமிக்கப்பட்ட CH/LRC/01 ஆம் இலக்க, 2017.08.10 ஆம் திகதிய குழுவின் அறிக்கை தொடர்பில் ஆணைக்குழுவின் தலைவரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) மேற்படி (இ) இல் குறிப்பிட்ட அறிக்கையை இச் சபையில் சமர்ப்பிக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

829/ ' 19

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில், அப்போதைய மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் வடக்கு மாகாண அபிவிருத்தி அமைச்சிற்கு 330 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) நேரியகுளம், இலுப்பைக்குளம், வேப்பங்குளம், அழகபுரி மற்றும் அடம்பன்குளம் ஆகிய 05 கிராமங்களைச் சேர்ந்த 40 பயனாளிகள் அதன்படி, தெரிவுசெய்யப்பட்டனர் என்பதையும்;

(iii) தற்போதைய நிலவரத்தின்படி, ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 330 வீடுகளுக்குப் பதிலாக செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் 150 வீடுகள் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளதால், நேரியகுளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள 40 பயனாளிகள் அவர்களது வீடுகளை இழந்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்த 330 வீடுகளைச் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவிற்கு வழங்குவதற்குத் தடையாகவுள்ள காரணிகள் யாவை;

(ii) நேரியகுளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள 40 பேரினது வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) அவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படவுள்ள திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?